TAM209D2

# தாத்தா பூ எங்கே போகிறது?

## ஆதாரம்: Book for Children






அது ஒரு இலையுதிர் காலம். தாத்தா பூக்கள் காற்றில் பாராசூட் போல எல்லா திசைகளிலும் பறந்து போகின்றன.

அவை உண்மையில் விதைகள். அவ்வளவு லேசாக இருக்கும்.



பக்கத்தில் ஒட்டுமுள் செடி ஒன்று வளர்ந்து இருந்தது. இதன் விதைகளைச் சுற்றி முள் இருக்கும். பார்ப்பதற்கு முள் பந்து போல் இருக்கும். இவை விலங்குகளின் உடலில் ஒட்டிக்கொள்ளும்.



ஒரு தாத்தா பூ அருகில் இருந்த ஒட்டுமுள் விதையிடம் “நாங்கள் பறக்கப் போகிறோம். நீயும் எங்களுடன் பறக்க வருகிறாயா?” என்று கேட்டது.



அப்போது காற்று வீசியது. தாத்தா பூ விதைகள் மேலே பறந்தன.




வழியில் ஊசியிலை மரக்கன்று ஒன்றைப் பார்த்தது. “நீ எப்படிப் பிறந்தாய்?” என்று கேட்டது.

“அணில் ஒன்று சாப்பிடுவதற்காக ஊசியிலை மர விதைகளை எடுத்துச் சென்றது. அதில் ஒரு விதை கீழே விழுந்தது. மண்ணுக்குள் சென்றது. அதிலிருந்து நான் முளைத்தேன்” என்று அந்தச்செடி சொன்னது.



சற்று தூரம் சென்ற பின், ‘பட் பட்’ என்று பட்டாசு வெடிப்பது போல் சத்தம். அவரைக் கொடியில் இருந்து விதைகள் வெடித்துச் சிதறின.



அவை மண்ணில் உருண்டு ஓடின. மண்ணும் புழுதியும் படிந்து பூமிக்கு உள்ளே சென்றன. மழை பெய்தவுடன் இரண்டு இலைகளுடன் குட்டித் தாவரமாக வெளியே எட்டிப் பார்க்கும்.



சிறிது தூரத்தில் ஒரு குளத்தில் தாமரை பூக்கள் நிறைய இருப்பதைப் பார்த்தது. ஒரு பூ மட்டும் இதழ்கள் இல்லாமல் ‘பூவடிக் கிண்ணம்’ மட்டும் இருந்தது. அதில் தான் தாமரை விதைகள் இருந்தன.



“இந்தக் கிண்ணத்தின் மேல் உறை மட்கி, விதைகள் வெளியேறும். தண்ணீரில் மிதந்து செல்லும்.



“மிதந்து மிதந்து களைப்படைந்து நீருக்குள் செல்லும். தரையில் விழும். அதிலிருந்து புதிய தாமரை செடி முளைக்கும்” என்று தாமரைப் பூ சொன்னது.




இப்போது தாத்தா பூ களைப்படைந்து விட்டது. தரையில் உட்கார்ந்தது. காற்று வீசியது. தாத்தா பூவை மண் மூடியது.



ஒருநாள் தாத்தா பூ செடியாக மண்ணுக்கு வெளியே வந்தது. பக்கத்தில்...

“ஹேய் முள்ளுச் செடி, நீ எப்படி இங்கே வந்தாய்?” என்று தாத்தா பூ செடி கேட்டது.



ஒரு மான் குட்டி என் அருகில் வந்தது. அதன் மேல் நான் ஒட்டிக் கொண்டேன். அது ஓடியது.



என் முட்களால் மான் குட்டி உடலில் அரிப்பு ஏற்பட்டிருக்கும். இந்த மரத்தில் அது தன் உடலை உரசியது. கீழே விழுந்தேன். செடியாக முளைத்தேன்.



இரண்டு நெருக்கமான நண்பர்கள் நீண்ட காலத்துக்குப் பிறகு சந்தித்துக் கொண்டார்கள். நிறைய பேசினார்கள்.